# TOR TIMES OF REPUBLIC

VOICE OF TAMILNADU

# டைம்ஸ் ஆஃப் ரிபப்ளிக்

| மார்ச் 2025 | மலர் -03 | இதழ் - 12 | தமிழ் மாத இதழ் | விலை ரூ.30/- |
| --- | --- | --- | --- | --- |
| March 2025 | Volume - 03 | Issue - 12 | Tamil Monthly | Price Rs. 30/- |




## அம்பேத்கர் குறித்து அமித் ஷா பேசிய அரசியல்

## விசிக - தவெக தலைவர்கள் கூட்டணி விவகாரம்!




**SRI MEENAKSHI TEXTILES**

No. 2/3, Singara Garden 3rd Lane, Old Washermenpet , Chennai - 600021.

S . SHANMUGAVEL - Mob : 95004 66660, 91156 66777 : 044 - 2596 9679.



# அம்பேத்கர் குறித்து அமித் ஷா பேசிய அரசியல் விவகாரம்!

நாடாளுமன்றத்தில் அரசியலமைப்புச் சட்டம் மீதான விவாதத்தின்போது உள்துறை அமைச்சர் அமித் ஷா கூறிய கருத்துக்கு காங்கிரஸ் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. அமித் ஷா தனது உரையின்போது, டாக்டர் பி.ஆர்.அம்பேத்கரின் மரபு குறித்துப் பேசினார். அப்போது, "இன்றைய சூழலில் அம்பேத்கரின் பெயரைப் பயன்படுத்துவது, ஒரு ஃபேஷன் ஆகிவிட்டது" என்று அமித்ஷா கூறினார். "இது இப்போது ஃபேஷனாகிவிட்டது. அம்பேத்கர், அம்பேத்கர், அம்பேத்கர், அம்பேத்கர்... இந்த அளவுக்கு கடவுளின் பெயரைப் பயன்படுத்தினால், ஏழு பிறவிகளுக்கும் நாம் சொர்க்கத்தை அடையலாம்" என்று அமித் ஷா தெரிவித்தார். அமித் ஷா பேசிய முழு உரையின் இந்தச் சிறிய பகுதி குறித்துப் பல சர்ச்சைகள் எழுந்துள்ளன.அமித் ஷாவின் இந்தக் கருத்துக்கு காங்கிரஸ் கட்சி தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது. மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார். "மனுஸ்மிருதியை நம்புவோருக்கு அம்பேத்கருடன் நிச்சயம் பிரச்னை இருக்கும்" என்று சமூக ஊடகமான எக்ஸ் பக்கத்தில் ராகுல் காந்தி பதிவிட்டுள்ளார்.புதன்கிழமை பிற்பகலில், பிரதமர் நரேந்திர மோதியும் அமித்ஷாவின் பேச்சு குறித்துத் தனது எக்ஸ் பக்கத்தில் நீண்ட பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். "நாடாளுமன்றத்தில் அம்பேத்கரை அவமதித்த இருண்ட அத்தியாயத்தை அமித் ஷா அம்பலப்படுத்தியுள்ளார். அம்பேத்கருக்கு எதிராக இழைக்கப்பட்ட பாவங்களின் நீண்ட பட்டியல் காங்கிரஸிடம் உள்ளது. அதில் அவரை இரண்டு முறை தேர்தலில் தோற்கடித்ததும் அடங்கும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

## அம்பேத்கர் பற்றி அமித் ஷா என்ன சொன்னார்?

அமித் ஷா தனது உரையில், நாட்டின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் முதல் அமைச்சரவையில் இருந்து அம்பேத்கர் ராஜினாமா செய்ததைக் குறிப்பிட்டிருந்தார். நீங்கள் இப்போது அம்பேத்கரின் பெயரை நூறு முறை சொன்னாலும், உங்களுக்கு அவர் மீதுள்ள உண்மையான உணர்வுகளையும் நீங்கள் பேச வேண்டும் என்று காங்கிரஸை குறிப்பிட்டு அமித் ஷா கூறினார். "நாட்டின் முதல் அமைச்சரவையில் இருந்து அம்பேத்கர் ஏன் ராஜினாமா செய்தார்?" என்று குறிப்பிட்ட அவர், "பட்டியலின சாதிகள் மற்றும் பழங்குடியினரை அரசு நடத்திய விதம் குறித்து அவர் பலமுறை அதிருப்தி தெரிவித்துள்ளார். மேலும் அரசின் வெளியுறவுக் கொள்கை மற்றும் 370வது பிரிவிலும் அம்பேத்கர் உடன்படவில்லை என்றார். அவருக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. எனவே அவர் அமைச்சரவையில் இருந்து விலகினார்" என்றார் அமித் ஷா. அம்பேத்கரின் கொள்கைகளை எதிர்க்கும் அதேவேளையில் வாக்குகளுக்காக அம்பேத்கரின் பெயரைச் சொல்வது குறித்தும் அமித் ஷா கேள்வி எழுப்பினார்.அமித் ஷா தெரிவித்த இந்த கருத்துக்குப் பிறகு, அம்பேத்கரை அமித் ஷா அவமதித்ததாக காங்கிரஸ் தலைவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ள கருத்துக்கு காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தனது எக்ஸ் பக்கத்தில் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். "பாபா சாகேப் அம்பேத்கரை இன்று மக்களவையில் உள்துறை அமைச்சர் அமித் ஷா அவமதித்ததன் மூலம், மூவர்ணக் கொடிக்கு, பாஜக/ ஆர்எஸ்எஸ் எதிரானது என்று மீண்டும் நிரூபித்துள்ளது. அவர்களின் முன்னோர்கள் அசோக சக்கரத்தை எதிர்த்தனர். சங்பரிவார் அமைப்பைச் சேர்ந்தவர்கள், தொடக்கத்தில் இருந்தே, அரசியலமைப்புக்கு பதிலாக மனுஸ்மிருதியை அமல்படுத்த விரும்பினர்" என்று மல்லிகார்ஜுன கார்கே குறிப்பிட்டுள்ளார். "அம்பேத்கர் மனுஸ்மிருதிக்கு எதிரானவர், அதனால்தான் அவர் மீது இவ்வளவு வெறுப்பு இருக்கிறது" என்றும் கார்கே கூறியுள்ளார். "என்னைப் போன்ற கோடிக்கணக்கான மக்களைப் பொறுத்தவரை, டாக்டர்.பாபா சாகேப் அம்பேத்கர் கடவுளுக்குச் சற்றும் குறைந்தவர் அல்ல. தலித்துகள், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் மற்றும் ஏழைகளின் தூதுவரான அம்பேத்கர் எப்போதும் அப்படியே இருப்பார். மோதி அரசின் அமைச்சர்கள் இதைக் கவனமாகப் புரிந்துகொள்ள வேண்டும்" என்று எச்சரிக்கும் தொனியில் கார்கே பதிவிட்டுள்ளார்.

## அமித் ஷாவின் பேச்சு 'மன்னிக்க முடியாதது' - பிரியங்கா காந்தி!

அரசியலமைப்புச் சட்டத்தை ஏற்று 75 ஆண்டுகள் நிறைவடைந்து இருப்பதையொட்டி, மக்களவையில் அரசியல் சாசனம் மீதான விவாதத்தில் பிரதமர் நரேந்திர மோதியும் நீண்ட உரை நிகழ்த்தினார். நரேந்திர மோதியின் உரை முழுவதும் ஜவஹர்லால் நேரு, இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி மற்றும் காங்கிரஸின் நீண்ட கால ஆட்சியைக் குறிவைத்திருந்தது. கிட்டத்தட்ட ஒரு மணிநேரம் 50 நிமிடம் நீடித்த அவரது உரையில், காங்கிரஸின் பெயரைக் குறிப்பிடாமல் 55 ஆண்டுக் காலமாக ஒரே குடும்பத்தின் ஆட்சி நீடித்ததாக, பிரதமர் மோதி கடுமையாக விமர்சித்துப் பேசினார். அதற்கு முன், மக்களவையில் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, சாவர்க்கரின் பெயரை எடுத்துக்கொண்டு, அரசியலமைப்பு மீதான அவரது



மாற்றத்திற்கான புரட்சியின் சின்னம்," என்று தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். மேலும், அவர்களின் இந்தக் கருத்து, உணர்வின்மையின் அடையாளம் மட்டுமல்ல, சமூக ஒற்றுமை மற்றும் ஜனநாயக விழுமியங்களுக்கு எதிரான அவமரியாதையின் அடையாளம் என்றும் சந்திரசேகர் கூறியுள்ளார். அமித் ஷா விளக்கம் நாடாளுமன்றத்தின் மாநிலங்களவையில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, அம்பேத்கர் குறித்த பேசியது சர்ச்சையாகியுள்ள நிலையில், அடுத்த தின மாலையில் இதுகுறித்து அவர் செய்தியாளர்களை சந்தித்து விளக்கம் அளித்தார். "காங்கிரஸ் கட்சி நேற்று முதல் உண்மைகளை திரித்து கருத்துகளை முன்வைத்து வருகிறது, இது கண்டிக்கத்தக்கது" என்று அமித் ஷா தனது கருத்துகளை தெரிவித்து வந்தார். "நாடாளுமன்றம் போன்ற நாட்டின் மிக உயர்ந்த ஜனநாயக மன்றத்தில் விவாதம் நடைபெறும் போது, அது உண்மைகளை மட்டுமே அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். காங்கிரஸ் கட்சி நேற்று முதல் உண்மைகளை திரித்து பேசிய விதம் மிகவும் கண்டிக்கத்தக்கது. இதை நான் வன்மையாகக் கண்டிக்க விரும்புகிறேன்"

கருத்து குறித்து கேள்விகளை எழுப்பினார். அதே நேரத்தில் முதல் முறையாக நாடாளுமன்றத்திற்கு வந்த அவரது சகோதரியும் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினருமான பிரியங்கா காந்தியும் அரசாங்கத்தைக் குறிவைத்துப் பேசினார். "பிரதமர் எந்தவொரு புதிய விஷயத்தையும் சொல்லவில்லை, அவரது உரை எங்களை முழுவதுமாக சலிப்படையச் செய்தது. பல ஆண்டுகளுக்குப் பிறகு, பள்ளியில் கணித வகுப்பில் அமர்ந்திருப்பது போல் உணர்ந்தேன். பிரதமர் எதாவது புதிதாகவும், நன்றாகவும் பேசுவார் என்று நினைத்தேன். ஆனால் அதற்குப் பதிலாக வெற்று வாக்குறுதிகளைப் பட்டியலிட்டார். ஊழலுக்கு எதிராக சகிப்புத்தன்மை இல்லை என்று அவர் பேசினால், அதானி விவகாரம் குறித்தும் விவாதிக்க வேண்டும்" என்று பிரியங்கா காந்தி சுட்டிக்காட்டினார்.சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ், மோதியின் உரையை, மிக நீண்ட பேச்சு என்று குறிப்பிட்டார். மேலும், முழக்கங்களில் யார் சிறந்தவர்கள் என்பதை, ஊடகவியலாளர்கள் நன்கு அறிவார்கள் என்றும் அவர் கூறினார். "மோதி அவரது உரையில் குறிப்பிட்ட 11 முழக்கங்களை நாங்கள் இன்று கேட்டோம்" என்றும் அகிலேஷ் யாதவ் குறிப்பிட்டுள்ளார். உத்தர பிரதேச மாநிலம் நாகினாவை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரசேகர், "அமித் ஷாவின் கருத்து, அம்பேத்கரின் போராட்டத்தை அவமதிக்கும் செயல்" என்று விமர்சித்துள்ளார். "உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் கருத்து, பாபா சாஹேப் டாக்டர் பீம்ராவ் அம்பேத்கரின் வரலாற்றுப் பங்களிப்பையும், சமூக நீதிக்கான அவரது போராட்டத்தையும் அவமதிப்பதாக உள்ளது. பாபா சாஹேப் டாக்டர் பீம்ராவ் அம்பேத்கரின் பெயரைப் பயன்படுத்துவது, 'பேஷன்' இல்லை. மாறாக, அவரது பெயர் கோடிக்கணக்கான ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நீதி மற்றும் உரிமைகள் கிடைக்கக் காரணமாயிருந்து, சமத்துவம், சுதந்திரம் மற்றும் சமூக



என்றார் அவர். "இதற்கு முன்பு அவர்கள்  பிரதமரின் கருத்துகளை திரித்து கூறினர். தேர்தலின் போது, எனது அறிக்கைகளை செயற்கை நுண்ணறிவை (AI) பயன்படுத்தி திரித்தனர். அம்பேத்கரை ஒருபோதும் அவமதிக்க முடியாத கட்சியைச் சேர்ந்தவன் நான். அம்பேத்கரின் கொள்கைகளை நாங்கள் பரப்புரை செய்து வருகிறோம் "என்று கூறினார்.

## அம்பேத்கரின் பெயரால் நிலவும் அரசியல் போட்டிகள்!

தற்போது பாபா சாஹேப் பீம்ராவ் அம்பேத்கரின் பெயரைப் முன்னிறுத்துவதில், இந்திய அரசியலில் போட்டி

நிலவி வருகிறது. அரசியலமைப்புச் சட்டம், சாதிவாரி கணக்கெடுப்பு, இடஒதுக்கீடு குறித்து காங்கிரஸ் தொடர்ந்து பேசி வருகிறது. "தலித் அரசியலில் பாஜகவை விட காங்கிரஸ் முன்னிலையில் இருக்கிறது. இந்துத்துவா அரசியலைத் தொடரும் பாஜகவுக்கு சாதி அடையாளம் பற்றிய கேள்வி, பிரச்னைகளை உருவாக்கலாம். பாஜக ஊக்குவிக்கும் இந்துத்துவா மாதிரியில், சாதி அடையாளம் பற்றிய கேள்வியே இல்லை என்றனர். மேலும், "சாதி அடையாளம் குறித்த கேள்வி எழுவதை பாஜக விரும்பவில்லை. காங்கிரஸ் தொடர்ந்து சாதி அடையாளத்தை வளர்த்து வருகிறது, இப்போது அதற்கு பதில் சொல்ல வேண்டிய அவசியத்தை பாஜக உணர்ந்துள்ளது. அம்பேத்கரைச் சுற்றி விவாதத்தை உருவாக்கி அதையே செய்ய பாஜக முயற்சிக்கிறது" . அம்பேத்கரின் நினைவாக பஞ்சதீர்த்தத்தை பாஜக நிறுவியது. பஞ்சதீர்த்தம் என்பது, அம்பேத்கர் பிறந்த இடம் முதல் அவருட தொடர்புடைய ஐந்து இடங்களை ஊக்குவிக்கும் பாஜகவின் முயற்சியாகும். லண்டனில் அம்பேத்கருக்கு ஒரு நினைவிடத்தையும் அமைத்தது. பாஜக ஆட்சிக்கு வந்த பின், அரசியலமைப்பு தினம், பெரிய அளவில் கொண்டாடப்பட்டு வருகிறது. ராஷ்டிர நிர்மன் பாபா சாஹேப் அம்பேத்கர்' (Rashtra Nirman Baba Saheb Ambedkar) புத்தகத்தின் ஆசிரியர் டாக்டர் பர்வேஷ் சௌத்ரி கூறுகையில், "பாபா சாஹேப் அம்பேத்கர் தலித்துகளின் தலைவர் மட்டுமல்ல, ஒட்டுமொத்த இந்தியா மற்றும் உலகத்தின் தலைவர். பாஜக இந்த கருத்தை முன்வைத்துள்ளது. காங்கிரஸ், அம்பேத்கரை ஒரு தலித் தலைவராக முன்னிறுத்தியது. ஆனால், பாஜக அவரை உலகளவிலான தலைவராக உருவாக்கி வருகிறது.மேலும், அவருடைய அனைத்து அம்சங்களையும் முன்னிறுத்தியுள்ளது."

அம்பேத்கர் குறித்து ஷா வின் கருத்துகளுக்கு போராட்டங்கள்!!

பி.ஆர். அம்பேத்கருக்கு எதிரான மத்திய அமைச்சர் அமித் ஷாவின் கருத்துக்களுக்கு கண்டனம் தெரிவித்தும், மன்னிப்பு கேட்கக் கோரியும், சென்னையில் பல்வேறு இடங்கள் உட்பட மாநிலம் முழுவதும் ஏராளமான திமுக தொண்டர்கள் மற்றும் தலைவர்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.திமுக தலைமையின் போராட்ட அழைப்பைத் தொடர்ந்து, தென் சென்னை மேற்கு மாவட்டப் பிரிவைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான தொண்டர்கள் மாவட்டச் செயலாளர் தலைமையில் வள்ளுவர் கோட்டம் அருகே கூடினர். நிகழ்வின் போது திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தித் தொடர்பாளர் டி.கே.எஸ். இளங்கோவன் மற்றும் பலர் போராட்டத்தின் நோக்கம் குறித்து விளக்கினர்.தனது உரையில், முந்தைய திமுக அரசு தமிழ்நாடு சட்டப் பல்கலைக்கழகத்திற்கு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் என்று பெயரிட்டு பி.ஆர். அம்பேத்கரை கௌரவித்ததை நினைவு கூர்ந்த ஆர்.எஸ். பாரதி, இந்தியாவில் அம்பேத்கரின் பெயரைக் கொண்ட முதல் பல்கலைக்கழகம் இது என்று குறிப்பிட்டார்.

இதேபோல், சென்னையில் உள்ள திமுகவின் பல மாவட்ட அலகுகள் நகர மையம், வேளச்சேரி, விருகம்பாக்கம், சைதாப்பேட்டை, ஒட்டேரி மற்றும் பிற இடங்களில் போராட்டங்களை நடத்தின. அதேபோல், விசிகவின் தொண்டர்களும் சென்னையில் பல்வேறு இடங்களில் போராட்டங்களை நடத்தினர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சார்பாக, முன்னாள் மத்திய அமைச்சர் கே.வி. தங்கபாலு, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சட்டமன்றத் தலைவர் எஸ். ராஜேஷ்குமார் மற்றும் பிற தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் கட்சித் தொண்டர்கள் தலைமையில் அண்ணா சாலையில் ஒரு போராட்டம் நடைபெற்றது.

இதற்கிடையில், சிபிஎம்-ஐச் சேர்ந்த நூற்றுக்கணக்கான தொண்டர்கள் மற்றும் தலைவர்கள் கட்சியின் மாநிலச் செயலாளர் கே. பாலகிருஷ்ணன் தலைமையில் ஒரு போராட்டத்தை நடத்தினர்.

இதேபோன்ற ஒரு நிகழ்வில், சட்டம் மற்றும் சிறைத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, இந்த விவகாரத்தில் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி அமைதியாக இருப்பதாக விமர்சித்தார்.

கூடுதலாக, மக்கள் நீதி மையம் (MNM) தலைவரும் நடிகருமான கமல்ஹாசன், அம்பேத்கரின் கருத்துக்கள் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதங்கள், அவர் உட்பட அவரது ஆதரவாளர்களின் உணர்வுகளைப் புண்படுத்துவதற்குப் பதிலாக, முன்னேற்றத்தைத் தூண்ட வேண்டும் என்று கூறினார்.

## அம்பேத்கர் வைத்து அரசியலா?

அம்பேத்கர் என்ற பெயர், இந்திய அரசியலில் ஒருபோதும் மங்காத ஒளியாக உள்ளது. சமூகநீதி, சமத்துவம், மனித உரிமைகள் ஆகியவற்றுக்காக குரல் கொடுத்த அவரது பாரம்பரியம், இன்றும் வாழ்கின்றது. ஆனால், தேர்தல் காலங்களில் அவரது பெயர் அரசியல் உரைகளில் அதிகமாக பயன்படுத்தப்படுவதும், இது ஒரு வாக்கு வங்கிப் போக்காக உருவெடுக்கிறதோ என்ற சந்தேகங்களும் எழுகின்றன. அமித்ஷாவின் பேச்சுக்கு எதிரான எதிர்க்கட்சி விமர்சனங்களும், அதன் பிறகு நடந்த அரசியல் விவாதங்களும், அம்பேத்கரின் பெயர் மீதான மரியாதையா? இல்லையெனில் அரசியல் லாபத்திற்கான ஓர் உத்தரவோ? என்பது குறித்து சிந்திக்க வைக்கும். அம்பேத்கரை உண்மையாக மதிக்கிறவர் யார்? அவரின் கருத்துகளை நடைமுறைப்படுத்த முயற்சிப்பவர் யார்? இவரது பெயரால் அரசியல் வீரம் பேசுபவர்கள் யார்?
- இவை எல்லாம் வாக்காளர்கள் தான் தீர்மானிக்க வேண்டியதாய் இருக்கிறது.

# பிரதமரின் விஸ்வகர்மா யோஜனா திட்டம்....!




பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு பாரம்பரிய தொழில்களை ஊக்குவிப்பதற்காக 'விஸ்வகர்மா' திட்டத்தை அறிவித்துள்ளது. இந்த திட்டத்தின் நோக்கம், பயன் மற்றும் அது எத்தகையாக பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பது குறித்து ஆராய தமிழக அரசு குழு அமைத்து உத்தரவிட்டுள்ளது.ஆக்ஸ்ட் 15ம் தேதி சுதந்திர தின உரையில், "விஸ்வகர்மா ஜெயந்தி அன்று, பாரம்பரிய திறன்களுடனோ கருவிகளுடனோ, கைகளாலோ வேலை செய்யும் மக்களுக்கு, பெரும்பாலும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு சுமார் 13 ஆயிரம்ரூபாய் வழங்கவுள்ளோம்" என்று அறிவித்தார்.PM Vishwakarma என்ற பெயரில் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்திற்கு 13,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யவும் பொருளாதார விவரங்களுக்கான கேபினட் கமிட்டி ஒப்புதல் அளித்தது. இந்த விஸ்வகர்மா திட்டம் 2023 முதல் 2028ம் ஆண்டு வரை ஐந்து ஆண்டுகள் அமலில் இருக்கும் என்றும் மத்திய அரசு அறிவித்துள்ளது. பிரதமரின் விஸ்வகர்மா யோஜனா திட்டத்தின் நோக்கம் என்னவென்றால், , குரு - சிஷ்ய பரம்பரை முறையை வளர்த்தெடுப்பதும், கருவிகள் மூலமும் கைகளின் மூலமும் பொருட்களைச் செய்யும் கைவினைக் கலைஞர்கள் குடும்பம் சார்ந்து இயங்குவதையும் ஊக்கப்படுத்துவதே நோக்கம் ஆகும். மேலும் கைவினை கலைஞர்களின் தயாரிப்புகள், சேவைகளின் தரத்தை மேம்படுத்துவதையும், உள்நாட்டு மற்றும் உலகளாவிய சந்தைகளுக்கு அவர்களின் பொருட்களை கொண்டுசெல்வதும் இந்த திட்டத்தின் நோக்கமாகும்.பிரதமரின் விஸ்வகர்மா யோஜனா திட்டத்தின் கீழ் சேர்ந்தால், அந்த கைவினைக் கலைஞர்கள் மற்றும் கைவினைத் தொழிலாளர்களுக்கு 'பிரதமர் விஸ்வகர்மா சான்றிதழ்' மற்றும் அடையாள அட்டை வழங்கப்படும் 3என்று குறிப்பிட்டனர். மேலும் முதல் தவணையாக ரூ. 1 லட்சம் வரை வட்டியில்லாக் கடன் அவர்களுக்கு வழங்கப்படும். பிறகு இரண்டாம் தவணையாக ரூ. 2 லட்சம் வரை 5% வட்டியுடன் கடன் வழங்கப்பட உள்ளது.பிரதமரின் விஸ்வகர்மா யோஜனா திட்டத்தின் கீழ் கல் தச்சர்கள், காலணி தைப்பவர், காலணி செய்பவர், தச்சர், பொற்கொல்லர்,

குயவர், சிற்பிகள், கொத்தனார், கயிறு செய்பவர், முடி திருத்தும் தொழிலாளர், பூமாலைகள் கட்டுபவர், சலவைத் தொழிலாளர், டெய்லர் உட்பட, 18 வகையான தொழில்களில் ஈடுபடுவோர் பயன் பெற உள்ளார்கள். மேலும் பிரதமரின் விஸ்வகர்மா திட்டத்தின் கீழ் தொழிற்கலைஞர்களுக்கு பயிற்சி வழங்கும் திட்டம் இருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. அடிப்படைப் பயிற்சிகள், மேம்பட்ட பயிற்சிகள் என இரு விதங்களில் பயிற்சிகள் வழங்கப்படும் என்றும் இந்தப் பயிற்சி பெறுவோருக்கு தினமும் 500 ரூபாய் நிதியுதவியாக வழங்கப்படும் என்றும் பயிற்சி பெற்ற பின்னர் தொழிற்கருவிகளை வாங்க 15,000 ரூபாய் நிதியுதவியாக வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் நாளை மறுதினம் பிரதமர் நரேந்தி மோடியால் விஸ்வகர்மா திட்டம் தொடங்கி வைக்கப்பட உள்ளது.இந்த திட்டத்திற்கு தமிழகத்தில் திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.குலத்தொழிலை ஊக்குவிக்கும் திட்டம் என்றும், குலகல்வியின் மறுவடிவம் தான் இந்த திட்டம் என்றும் விமர்சித்து வருகின்றன.

## திமுக அரசு கோரும் திருத்தங்கள் மற்றும் எதிர்ப்பதற்கான காரணங்கள் என்ன?

இந்நிலையில்தான், தமிழ்நாட்டில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த மாட்டோம் என்று மத்திய சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் ஜிதன்ராம் மஞ்சிக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

அதில், ‘‘பிரதமரின் விஸ்வகர்மா யோஜனா திட்டத்தில், உரிய திருத்தங்களை மேற்கொள்ளுமாறு கடந்த ஜனவரி 4 அன்று, பிரதமர் மோதிக்கு கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தில், விஸ்வகர்மா திட்டம், சாதி அடிப்படையிலான தொழில் முறையை வலுப்படுத்தும் என்பதைக் கருத்தில் கொண்டு, இந்தத் திட்டத்தை ஆய்வு செய்திட தமிழக அரசின் சார்பில் ஒரு குழு அமைக்கப்பட்டதாகவும், இந்தக் குழு விரிவான ஆய்வை மேற்கொண்டு, இந்தத் திட்டத்தில் மாற்றங்களைச் செய்திட பரிந்துரைத்து இருப்பதாகவும் தெரிவித்திருந்தேன்’’ என்று குறிப்பிட்டிருந்தார். மேலும், ‘‘அந்தக் குழுவின் பரிந்துரைகள்படி, விண்ணப்பதாரரின் குடும்பம், பாரம்பரியமாக குடும்ப அடிப்படையிலான வர்த்தகத்தில் ஈடுபட வேண்டிய கட்டாயத் தேவை நீக்கப்பட வேண்டும்; அதற்குப் பதிலாக, வழிகாட்டுதல்களில் பட்டியலிடப்பட்டுள்ள எந்தவொரு தொழிலையும் மேற்கொள்ள விரும்பும் எந்தவொரு நபரும் இந்தத் திட்டத்தின் கீழ் உதவி பெற தகுதியுடைவராக இருக்க வேண்டும்" என்று பரிந்துரைத்து இருப்பதாக மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார். இந்தத் திட்டத்தில் பயன் பெறும் குறைந்தபட்ச வயது வரம்பை 35 ஆக உயர்த்த வேண்டும் எனவும் இதன்மூலம் தங்கள் குடும்ப வர்த்தகத்தைத் தொடர, அதை நன்கு அறிந்தவர்கள் மட்டுமே இந்தத் திட்டத்தின்கீழ் பலன்களைப் பெற முடியும் எனவும் முதல்வர் தெரிவித்துள்ளார். "கிராமப்புறங்களில் பயனாளிகளைச் சரி பார்க்கும் பொறுப்பு, கிராமப் பஞ்சாயத்துத் தலைவருக்குப் பதிலாக வருவாய்த் துறையைச் சேர்ந்த கிராம நிர்வாக அலுவலரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று கூறியிருந்தேன்’’ என்றும் அந்தக் கடிதத்தில் முதல்வர் தெரிவித்துள்ளார்.

‘‘கடந்த மார்ச் 15ஆம் தேதியன்று, மத்திய அரசின் சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் அமைச்சகத்தில் இருந்து வந்த பதில் கடிதத்தில், தமிழக அரசு பரிந்துரைத்த திருத்தங்கள் தொடர்பாக எதுவும் குறிப்பிடப்படவில்லை. எனவே, பிரதமரின் விஸ்வகர்மா திட்டத்தைத் தற்போதைய வடிவில் செயல்படுத்துவதை தமிழக அரசு முன்னெடுத்துச் செல்லாது’’ என்று கூறியிருந்த முதல்வர் ஸ்டாலின், மாற்றுத் திட்டம் பற்றியும் அதில் குறிப்பிட்டிருந்தார். ‘‘சமூகநீதி என்ற ஒட்டுமொத்த கொள்கையின் கீழ், தமிழ்நாட்டில் உள்ள கைவினைஞர்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில், சாதி அடிப்படையில் பாகுபாடு காட்டாத கைவினைஞர்களை உள்ளடக்கி, விரிவான திட்டம் ஒன்றை உருவாக்கிட தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

இந்தத் திட்டம், சாதி மற்றும் குடும்பத் தொழில் வேறுபாடின்றி, மாநிலத்தில் உள்ள அனைத்துக் கைவினைஞர்களுக்கும் முழுமையான ஆதரவை அளிக்கும். இத்தகைய திட்டம் அவர்களுக்கு நிதியுதவி, பயிற்சி மற்றும் அவர்களின் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்தையும் விரிவாக உள்ளடக்கியதாக இருக்கும்’’ என்றும் முதல்வர் தெரிவித்துள்ளார்.ஆனால் இது குலத்தொழிலை வளர்க்கும் திட்டம் என்பதால்தான், இதை ஆரம்பத்தில் இருந்தே முதல்வர் ஸ்டாலின் எதிர்ப்பதாக திமுகவினர் கருத்துகளைப் பதிவிட்டு வருகின்றனர். மத்திய அரசு எதைக் கொண்டு வந்தாலும் கண்ணை மூடிக்கொண்டு ஆதரிப்பது திமுகவிற்கு வழக்கம் கிடையாது. ஒன்றிய அரசு கொண்டு வரும் ஒரு திட்டத்தை, அந்தந்த மாநிலத்துக்கு ஏற்ப மாற்றம் செய்துகொள்ள வேண்டுமென்று வலியுறுத்துவதுதான் கூட்டாட்சியின்





அடிப்படை. அரசியலமைப்புச் சட்டமும் இதையே உறுதி செய்கிறது. அதன்படி விஸ்வகர்மா திட்டத்தில் திருத்தங்களை திமுக கோரியுள்ளது'' என்றார்.

திருத்தம் கோருவதில் எந்தத் தெளிவுமில்லை என்று திமுகவின் அரசியல் பார்வை வேறு என்றனர். அதிமுகவின் அரசியல் கணக்குகள் வேறு. உதய் மின் திட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்தபோது, அதைச் செயல்படுத்த ஜெயலலிதா மறுத்தார்.

ஜெயலலிதா இருக்கும் வரை, இத்திட்டத்தை தமிழகத்தில் செயல்படுத்த முடியாது என்று அப்போது பொறுப்பிலிருந்த மத்திய எரிசக்தித் துறை அமைச்சர் பியூஷ் கோயல் கூறினார். அவர் சொன்னபடியே ஜெயலலிதா மறைந்ததும் அதில் எந்தவோர் எதிர்ப்புமின்றி எடப்பாடி பழனிசாமி கையெழுத்திட்டார்.

சொத்து வரியை ஆண்டுதோறும் உயர்த்தும் நிதிக்குழுவின் நிபந்தனையையும் அவர் ஏற்றுக் கொண்டதும் இப்படித்தான். சட்ட அறிவே இல்லாமல் ஒன்றிய அரசு சொல்வதை ஏற்பதுதான் இன்றைய அதிமுகவின் நிலைப்பாடு. திமுக எப்போதுமே தெளிவாகத்தான் ஒரு விஷயத்தை எதிர்க்கும்'' என்றார்.

முதல்வரின் கடிதத்துக்கு தொடங்கியுள்ள எதிர்ப்புகள் !

முதல்வரின் இந்தக் கடிதத்திற்கு, பாரதிய ஜனதா தரப்பில் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது. இதுகுறித்து பத்திரிக்கையாளர்களுக்குப் பேட்டியளித்த வானதி சீனிவாசன், ''இந்தத் திட்டத்தை தமிழகத்தில் செயல்படுத்தினால், பிரதமருக்கும், பாரதிய ஜனதாவுக்கும் நல்ல பெயர் கிடைத்துவிடுமோ என்ற ஆற்றாமையில், இத்திட்டம் சமூக நீதிக்கு எதிரானது என்று திமுக பொய்ப் பிரசாரம் செய்வதாக" தெரிவித்தார்.

"இதைத் தற்போதுள்ள நிலையில் செயல்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் மாநிலத் தலைமையுடன் கலந்து பேசி, போராட்டம் நடத்த முடிவு செய்யவுள்ளோம்'' என்று தெரிவித்துள்ளார். இந்த விவகாரம் தொடர்பாக இருதரப்பிலும் சமூக ஊடகங்களில் கருத்துப் போர் வலுத்து வருகிறது. ஆனால் அதிமுக உள்ளிட்ட பிற முக்கியக் கட்சிகள் தரப்பில் இதுபற்றி எந்தக் கருத்தும் தெரிவிக்கப்படவில்லை. இதுபற்றி பிபிசி தமிழிடம் பேசிய அதிமுக செய்தித்தொடர்பாளர் சத்யா, ''இதில் மத்திய அரசுக்கு என்னென்ன பரிந்துரைகளை தமிழ்நாடு அரசு செய்தது என்பது தெளிவுபடுத்தப்படவில்லை. எந்தவொரு தொழில் முனைவோருக்கும் கடன் உதவியும், மானியமும் அளிப்பது நல்ல விவகாரம், என்று கூறினார். ஆனால் "அந்தத் தொழிலை சாதியரீதியாகப் பார்ப்பது, எந்த மாதிரியான நிலைப்பாடு என்பதையே புரிந்துகொள்ள முடியவில்லை. ஒரு தொழிலை நீ மட்டும்தான் செய்ய வேண்டும் என்பதும் தவறு; ஒரு தொழிலை இன்னொருவர் செய்யக்கூடாது என்பதும் தவறு. இந்தத் திட்டத்தில் இரு அரசுகளுக்கும் ஒரு தெளிவில்லை. தெளிவுபடுத்தினால் மட்டும்தான் இதில் அதிமுக தலைமையின் நிலைப்பாட்டைக் கூற முடியும்'' என்றார்.

இரண்டும் ஒரே திட்டமா ....மாநில அரசு சொல்வது என்ன?இரண்டு திட்டங்களின் சர்ச்சைகள் !

மத்திய அரசின் விஸ்வகர்மா யோஜனா திட்டம், கடந்த ஆண்டு செப்டம்பர் 17 ஆம் தேதி துவக்கப்பட்டது. இதற்காக ரூ.13 ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

திட்டத்தின்படி, 'பொற்கொல்லர்கள், தச்சர்கள், குயவர்கள், சிற்பிகள், காலணி தைக்கும் தொழிலாளிகள், கூடை, பாய் தயாரிப்பவர்கள், கயிறு தயாரிப்போர், சலவைத் தொழிலாளர்கள், தையல் தொழிலாளர்கள், இரும்புக் கொல்லர்கள், பூட்டு தயாரிப்போர் என பதினெட்டு வகையான தொழில்களைச் செய்வோர் பலன் பெறலாம்' என மத்திய அரசு தெரிவித்துள்ளது. இத்தொழில்களை மேற்கொள்ளும் தொழிலாளிக்கு முதல் தவணையாக ஒரு லட்ச ரூபாய் வரை வட்டியில்லா கடனும் இரண்டாம் கட்டமாக இரண்டு லட்ச ரூபாயும் வழங்கப்படும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

திட்டத்தின்படி, "விண்ணப்பிக்கும் நபருக்கு 18 வயது நிரம்பியிருக்க வேண்டும். விண்ணப்பிக்கும் முன்பே அந்த தொழிலில் ஈடுபட்டிருக்க வேண்டும். திட்டத்தில் இணைந்த பிறகு அடிப்படை மற்றும் உயர்நிலை பயிற்சிகள் வழங்கப்படும்" என, மத்திய அரசு தெரிவித்துள்ளது. பயிற்சி காலத்தில் நாளொன்றுக்கு ரூ.500 வழங்கப்படும் எனவும் மத்திய அரசின் திட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

கலைஞர் கைவினைத் திட்டத்தில் 25 வகையான தொழில்களைப் பட்டியலிட்டுள்ளது தமிழ்நாடு அரசு தமிழ்நாடு சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், கடந்த 10ஆம் தேதி செய்தி அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அதில், கலைஞர் கைவினைத் திட்டம் பற்றி அவர் குறிப்பிட்டுள்ளார். குடும்பத் தொழில் அடிப்படையில் அல்லாமல் 25 கைவினைக் கலைகள் மற்றும் தொழில்களில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாக, அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார். இத்திட்டத்தின் மூலம் புதிய தொழிலைத் தொடங்கவும் செய்யும் தொழிலை மேம்படுத்தவும் கடன் உதவி மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட உள்ளதாக அரசின் செய்திக் குறிப்பு கூறுகிறது. இதற்காக அதிகபட்சமாக 3 லட்ச ரூபாய் வரையில் கடன் உதவி பெறலாம். அதிகபட்சமாக ரூ.50 ஆயிரம் மானியம் வழங்கப்படும், 5 சதவீதம் வரையில் வட்டி மானியமும் வழங்கப்படும் என அரசு தெரிவித்துள்ளது. இந்த திட்டத்தின் பயனாளிகள், குறைந்தபட்சம் 35 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ள தமிழ்நாடு அரசு, படகு தயாரித்தல், மர வேலைகள், உலோக வேலை, மண் பாண்டம், கட்டட வேலை, கயிறு, பாய் பின்னுதல், மலர், பொம்மை வேலைகள், அழகுக்கலை, நகை தயாரிப்பு, துணி வெளுத்தல், துணி தேய்த்தல், இசைக்கருவி தயாரித்தல், பனை ஓலை, பிரம்பு வேலைப்பாடு, ஓவியம் வரைதல் உள்பட 25 வகையான தொழில்களைப் பட்டியலிட்டுள்ளது.

**சர்ச்சை ;** மத்திய அரசின் விஸ்வகர்மா திட்டத்தின் மீது ஸ்டிக்கர் ஒட்டி பெயரை மாற்றி தி.மு.க அரசு வெளியிட்டுள்ளதாக, தமிழ்நாடு பா.ஜ.க தலைவர் அண்ணாமலை விமர்சித்துள்ளார். விஸ்வகர்மா திட்டத்தை தமிழ்நாட்டில் செயல்படுத்த முடியாமல் குழப்பம் ஏற்படுத்தியதால் தமிழக மக்களின் கோபத்தை தி.மு.க எதிர்கொள்ள நேர்ந்தது என, தனது எக்ஸ் பக்கத்தில் அண்ணாமலை தெரிவித்துள்ளார். உண்மையான பயனாளிகளுக்கு பிரதமரின் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் மானியங்களின் நோக்கத்தை தி.மு.க அரசு நீர்த்துப் போகச் செய்துள்ளதாக கூறியுள்ள அண்ணாமலை, "மக்களுக்கு பயன் அளிக்காத அரசியல் அர்த்தமற்றது என்பதை ஸ்டாலின் புரிந்து கொள்ள வேண்டும்" எனவும் கூறியுள்ளார்.பாஜக மாநில பொருளாளர் எஸ்.ஆர்.சேகர், "முன்கூட்டியே இந்த திட்டத்தை தி.மு.க அரசு கொண்டு வந்திருந்தால் சிக்கல் இல்லை. மத்திய அரசு கொண்டு வந்த பின்னர், புதிதாக கொண்டு வந்ததுபோல காட்டிக் கொள்கிறது" என்கிறார்.

## மக்கள் நலமா அல்லது அரசியல் சண்டையா?

விஸ்வகர்மா யோஜனாவின் கீழ் மத்திய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள், மக்கள் நலனுக்கான நோக்கங்களுடன் ஆரம்பித்துள்ளன என்று துவங்கினாலும், இதன் நடைமுறைகள் மற்றும் திட்ட செயல்படுத்தல் முறைகள் அரசியல் சண்டைகளுக்கு இடமாக மாறிவிட்டது. திட்டம் முதலில் கைவினைத் தொழிலாளர்களின் பாரம்பரியங்களை ஊக்குவிப்பதற்காக இருந்தாலும், அதன் செயல்படுத்தல் முறைகள், பண நிர்வாகம், மற்றும் பெயரிடல் விவகாரங்களில் திருப்தியற்ற நிலையை உருவாக்கியுள்ளது. இந்த திட்டம், குறிப்பாக தமிழ்நாட்டில், முக்கியமான எதிர்ப்புகளையும் பரிந்துரைகளையும் சந்தித்து வருகிறது. மத்திய அரசின் திறமையான நிதி ஒதுக்கீடு மற்றும் பயிற்சி திட்டங்களை செயல்படுத்துவதை விட, அரசு இந்தத் திட்டத்தை பொதுவாக ஒரு பிரச்சாரக் கருவியாக மாற்றியது என சில மாநிலங்கள் குற்றம் சாட்டுகின்றன. அந்த வழியில், ஒரு திட்டம் மக்கள் நலனுக்காக உருவாக்கப்பட்டாலும், அதன் நிறைவேற்றம் நேர்மையாக செயல்படுகிறதா என்பதை மதிப்பிடுவது முக்கியமாகிறது. இது சரியான இடைவெளியில் திசை மாற்றி, சமூக பலன்கள் பாதிக்கப்படுகிறதா என்பது அரசியல் பங்களிப்புகளை கொண்டிருக்கும். அதிகாரம் பெற்ற மாநில அரசுகள், மக்கள் நலனுக்கான ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் மற்றும் ஆலோசனைகளுடன் திட்டங்களை இயக்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கின்றன. இதன் மூலம், இந்த திட்டம் உண்மையான மாற்றத்தைக் கொண்டு வருவதை சாத்தியமாக்கலாம், ஆனால் இப்போது அது அரசியல் பரபரப்புகளாக மாறிவிட்டது.

இதில் மிக முக்கியமான கேள்வி இதுதான்: இந்த திட்டம் அரசியலுக்காக மட்டுமே உருவாக்கப்பட்டதா அல்லது கைவினைத் தொழிலாளர்களின் நலனுக்காக முனைவது? எந்தநிலையில் இதன் செயல்பாடுகள் வெற்றிகரமாக அமையும் என்பதை பார்க்கலாம்.



# விசிக - தவெக

## தலைவர்கள் கூட்டணி விவகாரம்!



நடிகர் விஜய் அம்பேத்கர் நூல் வெளியீட்டு விழா மேடையில் விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளன் குறித்துப் பேசியது சமூக ஊடகங்களில் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது. அம்பேத்கர் நினைவு தினமான இன்று (டிசம்பர் 6) 'எல்லோருக்குமான தலைவர் அம்பேத்கர்' என்ற புத்தகத்தை விகடன் பதிப்பகம் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் தலைமையில் வெளியிட்டது. இந்த புத்தக வெளியீட்டு விழா சென்னையில் உள்ள வர்த்தக மையத்தில் நடைபெற்றது.  த.வெ.க தலைவர் விஜய் நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன்னதாக அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.தமிழ் சினிமாவின் உச்சத்தில் இருந்த நடிகர் விஜய், கட்சி துவங்கிய பிறகு பங்கேற்கும் முதல் பொது நிகழ்ச்சி இதுதான். எனவே இந்த நிகழ்ச்சியில் அவர் என்ன பேசப் போகிறார் என்ற எதிர்பார்ப்பு பலத்தரப்பினர் மத்தியில் எழுந்தது.

'எல்லோருக்குமான தலைவர் அம்பேத்கர்' புத்தகத்தை த.வெ.க தலைவர் விஜய் வெளியிட, முதல் பிரதியை அம்பேத்கரின் பேரன் ஆனந்த் டெம்டும்டேவும், இரண்டாவது பிரதியை மேனாள் நீதிபதி சந்துரு பெற்று கொண்டனர். மூன்றாவது பிரதியை ஆதவ் அர்ஜுனாவும், நான்காவது பிரதியை விகடன் குழுமத்தின் நிர்வாக இயக்குநர் பா.சீனிவாசனும் பெற்றுக்கொண்டனர்.புத்தக வெளியீட்டு விழாவில் அம்பேத்கரை பற்றிப் பேசிய விஜய், "அம்பேத்கர் புத்தகம் வெளியீட்டு விழாவில் கலந்து கொள்வதைப் பெரும் வரமாகக் கருதுகிறேன். மிகப்பெரிய சமூக மாற்றத்தை ஏற்படுத்தியவர்கள் இருக்கும் இந்த மேடையில் நான் பங்கேற்றது பெருமையாக இருக்கிறது. பிறப்பால் நாம் அனைவரும் சமம் என்பதை உறுதி செய்யும் வகையில் அரசியல் சாசன சட்டத்தைக் கொடுத்தவர் அம்பேத்கர். இன்றைய சூழலில் அம்பேத்கர் உயிரோடு இருந்திருந்தால் இந்தியாவை பற்றி என்ன நினைப்பார்? இப்போது நடக்கு பிரச்னைகளையும், கொடுமைகளையும் பார்த்தால் அம்பேத்கர் வெட்கித் தலைகுனிவார்," என்றார்.  முன்னதாக, விசிக தலைவர் தொல்.திருமாவளவன் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதாக இருந்தது. பின்னர் அவர் இதில் கலந்து கொள்வதைத் தவிர்த்தது பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்தியது.

அதற்கு விளக்கமளிக்கும் வகையில் திருமாவளவன் இன்று அறிக்கை வெளியிட்டுத் தெளிவுபடுத்தியிருந்தார்.

இந்நிலையில், அதுகுறித்தும் விஜய் கருத்து தெரிவித்துள்ளார்.அதுகுறித்துப் பேசியபோது, அம்பேத்கரின் நினைவு நாளில், இப்படி ஒரு நிகழ்வில் கலந்துகொள்வது எனக்குக் கிடைத்த மிகப்பெரிய வரம்" என்று பேசிய விஜய், "விசிக தலைவர் திருமாவளவன் அவர்களால் இன்று வர முடியாமல் போனது. அம்பேத்கர் புத்தக வெளியீட்டு விழாவில் கலந்து கொள்ள முடியாத அளவிற்கு அவருக்குக் கூட்டணி கட்சிகள் சார்ந்து எவ்வளவு அழுத்தம் இருக்கும் என்று எனக்கு நன்றாகத் தெரிகிறது" என்றார். இதுகுறித்துப் பேசும்போது, திருமாவின் மனம் முழுவதும் இன்று நம்முடம்தான் இருக்கும்" என்று பேசியதோடு, விஜய் மத்திய அரசை விமர்சித்தும் கருத்து தெரிவித்தார். அம்பேத்கர் குறித்துப் பேசும்போது சட்ட ஒழுங்கு பற்றி பேசாமல் இருக்க முடியாது. இந்தியாவில் எந்த அளவுக்கு சட்ட ஒழுங்கு மீறப்படுகிறது என்பதைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். மணிப்பூரில் என்ன நடக்கிறது என்பது அனைவருக்கும் தெரியும். இதையெல்லாம் மத்தியில் ஆளும் அரசு கொஞ் சம்கூட கண்டுகொள்வது இல்லை என்றார்.

திமுக அரசை கடுமையாக விமர்சித்த விஜய்! "மன்னர் ஆட்சி ஒழிக்கப்பட வேண்டும்" யாருடைய கருத்து!

தவெக தலைவர் விஜய், தமிழகத்தில் ஆளும் அரசு வேங்கை வயல் பிரச்னையைக் கண்டு கொள்ளாமல் இருக்கிறது என்று தமிழக அரசையும் காட்டமாக விமர்சித்துப் பேசினார்.

மத்திய அரசு மற்றும் தமிழக அரசின் செயல்பாடுகளில் அதிருப்தியை வெளிப்படுத்திய விஜய், இதையெல்லாம் பார்த்தால் அம்பேத்கர் கோபப்படுவார்" என்றார்.

இங்கே சம்பிரதாயத்திற்காக அரசியல் நடக்கிறது. வெள்ளத்தில் நின்று புகைப்படம் எடுத்து, சமூக ஊடகங்களில் பதிவிடுவது வழக்கமாகி விட்டது" என்று கூறிய அவர், தனக்கு அரசியல் செய்யத் தெரியாது என்றும் "மக்களின் உரிமைகளுக்காக உணர்வுப்பூர்வமாக குரல் கொடுப்பேன்" என்றும் தெரிவித்தார். மேலும், இப்போது இங்கு நடக்கும் எல்லா பிரச்னைகளுக்கும் ஒரே தீர்வு மக்களை மனதார நேசிக்கும் ஒரு தலைவரின் ஆட்சி. மக்களின் உணர்வுகளை மதிக்கத் தெரியாத, அடிப்படை உரிமையான பாதுகாப்பை கூட உறுதி செய்யாத, கூட்டணிக் கணக்குகளை மட்டுமே நம்பி இருமாப்புடன் 200 வெல்வோம் என்று முழக்கமிடும் ஆட்சிக்கு என் மக்களோடு இணைந்து நான் விடுக்கும் எச்சரிக்கை, உங்கள் சுயநலத்திற்காக நீங்கள் போடும் கூட்டணிக் கணக்குகள் 2026இல் மக்களே மைனஸ் ஆக்கிவிடுவார்கள்" என்றார்.

அதுமட்டுமில்லாமல் ஆதவ் அர்ஜுனா தவெக கட்சியில் இணைந்ததை அடுத்து இந்நிகழ்ச்சியில் 'தமிழகத்தில் மன்னர் ஆட்சி ஒழிக்கப்பட வேண்டும்' எனவும் இனி தமிழகத்தில் மன்னர் ஆட்சி முறை உருவாகக்கூடாது" என்று தெரிவித்தார். மன்னர் பரம்பரையை உருவாக்க தமிழகம் இனி ஒருபோதும் இடம் தராது. அதை ஒழிப்பதற்கு அம்பேத்கரின் சிந்தனைகள் நமக்குத் தேவைப்படுகின்றன. அம்பேத்கரின் கொள்கைகள் தமிழகத்தில் மன்னராட்சியை உடைக்கும் என்றார்.

ஆதவ் அர்ஜுனா 2026 தேர்தல் பற்றிப் பேசியப்போது, "2026 தேர்தலில் மன்னராட்சியை ஒழிக்க வேண்டும். பிறப்பால் ஒருவர் முதலமைச்சராகக் கூடாது" என்றார். விஜய் அரசியல் பிரவேசம் பற்றிப் பேசிய அவர், "ஒரு தலித் முதல்வராக வர வேண்டும் என முதலில் ஒலித்த குரல் விஜய் உடையதுதான். ஆட்சியில் பங்கு அதிகாரத்தில் பங்கு என்பதை முதலில் கூறியவர் விஜய்" என்றார்.

சினிமாவில் ஆயிரம் கோடி வணிகத்தை கைவிட்டு விஜய் அரசியலுக்கு வந்திருக்கிறார். ஆனால் இங்கு ஒரு தயாரிப்பு நிறுவனம், ஒட்டுமொத்த சினிமா துறையையும் கட்டுப்படுத்தி, அதில் அரசியல் செய்து வருகிறது" என்றார். சினிமா துறையில் இருந்த விஜய்க்கு அரசியல் தெரியாது கொள்கை தெரியாது என்கிறார்கள். கொள்கை தெரிந்தவர்கள் அரசியலுக்கு வந்து என்ன செய்தார்கள்? ஊழல்தான் செய்தார்கள்" என்றார்.

எதனால் இந்த சர்ச்சைகள் .....அதிருப்தியை தெரிவித்த விசிக தலைவர் திருமாவளவன்!

கொள்கைகளும் கோட்பாடுகளும் வேறாக இருந்தாலும் இருவேறு அரசியல் கட்சித் தலைவர்கள் ஒரே மேடையில்






பங்கேற்பது பல சமயங்களில் மக்கள் பார்த்த ஒன்றாகவே இருக்கிறது.ஆனால் திருமாவளவன் விஜயுடன் இந்த புத்தக வெளியீட்டு விழாவில் கலந்துகொள்வது, விஜயின் விக்கிரவாண்டி மாநாட்டிற்குப் பிறகு பெரும் சர்ச்சையாக மாறியது. அக்டோபர் 7ஆம் தேதியன்று நடைபெற்ற அந்த மாநாட்டில் தன்னுடைய கட்சியின் அரசியல் எதிரி திமுக என்று கூறினார்.

பிளவுவாத அரசியல் செய்பவர்கள் த.வெ. கவின் கொள்கை எதிரி. திராவிடம், பெரியார், அண்ணாவின் பெயரை வைத்துக்கொண்டு, தமிழ்நாட்டைச் சுரண்டும் ஒரு குடும்பச் சுயநலக் கூட்டம் நமது அரசியல் எதிரி, என்றார் விஜய். பிறகு, கூட்டணி குறித்துப் பேசிய அவர், "2026ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் தனிப்பெரும்பான்மை கிடைக்கும் என்ற நம்பிக்கை உண்டு. இருப்பினும், நம்மோடு கூட்டணி வைப்பவர்களுக்கு ஆட்சி அதிகாரத்தில் பங்கும், அதிகாரப் பகிர்வும் கொடுக்கப்படும்" என்று கூறினார். ஆனால், இந்த மாநாடு நடைபெறுவதற்குச் சில வாரங்களுக்கு முன்பு ஆட்சியிலும் பங்கு அதிகாரத்திலும் பங்கு என்றும், 'அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதுதான் ஜனநாயகம், குவித்து வைப்பது அல்ல, இது யாரையும் மிரட்டுவதற்காகச் சொல்லப்படும் கருத்து அல்ல என்றும் திருமாவளவன் கூறியிருந்தார்.

இந்தச் சூழலில் விஜய் தன்னுடைய மாநாட்டில் பேசியது, விசிக உடனான கூட்டணிக்கான அழைப்பாகக் கருத்தப்பட்டது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் திருமாவளவன், தாங்கள் திமுக கூட்டணியில் உறுதியாக நீடிப்பதாகவும், விஜயுடன் ஒரே மேடையில் பங்கேற்பதாலேயே அவருடன் கூட்டணி சேர்வோம் எனக் கூறுவது சரியல்ல என்றும் கூறினார்.

அவருடைய அதிருப்தி யும் தெரிவித்தார். விஜயுடன் ஒரே மேடையில் பங்கேற்பதாலேயே அவருடன் கூட்டணி சேர்வோம் எனக் கூறுவது சரியல்ல என்று திருமாவளவன் குறிப்பிட்டார்.அம்பேத்கர் பிறந்தநாளான ஏப்ரல் 14ஆம் தேதி அன்றே இந்த புத்தக வெளியீட்டு விழா திட்டமிடப்பட்டது. தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் புத்தகத்தை வெளியிட, திருமாவளவன் அதைப் பெற்றுக்கொள்வதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் அந்த நிகழ்வு திட்டமிட்டபடி நடைபெறவில்லை.

விஜயின் கட்சி அதிகாரப்பூர்வமாக நிறுவப்படுவதற்கு முன்பாகவே இந்த புத்தக வெளியீட்டு விழாவில் பங்கேற்பதை உறுதி செய்துள்ளார் திருமாவளவன் என்பது அவரது அறிக்கையின் மூலம் உறுதியாகிறது.

டிசம்பர் 6ஆம் தேதி வெளியிட்ட அறிக்கையில் "விஜய் விழாவில் பங்கேற்க இசைவளித்துள்ளதாகச் சொல்லப்பட்டது. அவரது கட்சியின் விக்கிரவாண்டி மாநாடு நடைபெறுவதற்கு முன்பு அவ்வாறு சொல்லப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது என்று மேற்கோள் காட்டிய திருமாவளவன், இதுதொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்புகள் ஏதும் வெளிவராத சூழலில் ஒரு தமிழ் நாளிதழ் இதைப் பெரிய செய்தியாக வெளியிட்டதாகக் கூறியுள்ளார். மேலும், ஒரு நூல் வெளியீட்டு விழாவைப் பூதாகரப்படுத்தி அந்நாளேடு அதை அரசியலாக்கியது, என்றும் தன்னுடைய அறிக்கையில் குற்றம் சாட்டியுள்ளார். "திமுகவுக்கும் விசிகவுக்கும் இடையிலுள்ள நட்புறவில் ஐயத்தைக் கிளப்பி, கருத்து முரண்களை எழுப்பி, திமுக கூட்டணிக்குள் குழப்பத்தை ஏற்படுத்துவதும், அதன் மூலம் கூட்டணியில் விரிசலை உருவாக்குவதும்தான் இதன் உள்நோக்கமாக இருக்க முடியும் என்று பெயர் ஏதும் குறிப்பிடாமல் குற்றச்சாட்டை முன்வைத்தார் அவர்.

இந்த விழாவில் திருமாவளவன் பங்கேற்கவில்லை என்ற தகவல்கள் உறுதியானதும், பலர் பல்வேறு ஊகங்களை பரப்பி வருவதாகக் கூறும் அவர், "இவர்களில் பெரும்பாலானோர், திமுக கூட்டணியை உடைக்க வேண்டுமென்ற செயல் திட்டத்தோடு," இருப்பதாகக் குறிப்பிட்டார்.

# புதிய தலைமுறையின் தேர்தல் வியூக சிந்தனையாளர்

## - ஆதவ் அர்ஜுனா !

**ஆதவ் அர்ஜுனா தமிழ் நாட்டைச் சேர்ந்த அரசியல்வாதி, தேர்வு வியூக வகுப்பாளர் மற்றும் விளையாட்டுத்துறையின் முக்கிய நிர்வாகி ஆவார். ''அரைஸ் கேப்பிட்டல்'' எனும் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராகவும், 2021ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு ஒலிம்பிக் சங்கத்தின் பொதுச் செயலாளராகவும், 2023ஆம் ஆண்டு முதல் இந்தியக் கூடைப்பந்து சம்மேளனத்தின் தலைவராகவும் பணியாற்றி வருகிறார். இவர் அரசியல் துறையில் கால் பதிக்கத் துவங்கியது 2011ஆம் ஆண்டு - ''நமக்கு நாமே பயணம்'' என்ற நிகழ்வில் மு.க. ஸ்டாலினுடன் இணைந்து செயற்பட்டார். அதன்பின்னர், 2016ஆம் ஆண்டில் சுனில் கனுகோலுவுடன் இணைந்து செயல்பட்டார். பின்னர், பிரசாந்த் கிஷோர் தலைமையிலான தேர்தல் மேலாண்மை குழுவுடன் இணைந்து 2021ஆம் ஆண்டு திமுகவிற்கு வெற்றிகரமான வியூகங்களை வகுத்துக் கொடுத்தவர். அவரின் பங்களிப்பால், திமுக முதன்முறையாக முழுமையான தொழில்நுட்ப ஆதரவுடன், வாக்காளரின் மனநிலையை கணிக்கும், வாக்கு வங்கியைப் பகுப்பாய்வு செய்யும், சமூக ஊடகத்தை முழுமையாகக் கையாளும் திறமையை பெற்றது. இது அந்த தேர்தலில் திமுக வெற்றிக்கு காரணமாக அமைந்தது. அவருடைய தேர்தல் வியூக அணுகுமுறை மிகவும் கட்டமைக்கப்பட்டதாகும். வாக்காளர்களின் மனநிலையை நேரடியாகப் புரிந்து கொள்ளும், தொகுதி ரீதியாக பணிகள் பிரிக்கப்படும், பிரச்சார திட்டங்களில் தரவுகள் அடிப்படையில் திட்டமிடல், இளம் வாக்காளர்களை கவரும் நோக்கத்தில் டிஜிட்டல் ஊடகங்களை பரப்பும் முறைகள் ஆகியவற்றில் அவருடைய பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. வாய்ஸ் ஆப் காமன்ஸ் எனும் தனது அரசியல் வியூக நிறுவனம் மூலம் பல்வேறு கட்சிகளுக்குத் தேர்தல் பரிந்துரைகளை வழங்கி, தனக்கென ஒரு நிலையை அவர் உருவாக்கியுள்ளார்.**



அரசியல் திருப்பங்கள் - விசிகவிலிருந்து தவெக வரைக்கும்!

2023ஆம் ஆண்டு, திருச்சியில் நடந்த விடுதலை சிறுத்தைகள் கட்சி மாநாட்டில் கலந்து கொண்டு அந்த கட்சியில் இணைந்த ஆதவ் அர்ஜுனா, துணைப் பொதுச் செயலாளராக பதவியேற்றார். ஆனால், கட்சியின் தலைமை அறிவுறுத்தல்களுக்கு முரணான வகையில் செயல்பட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டு, ஆறு மாத இடைநீக்கம் விதிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, 2024 டிசம்பர் 14ஆம் தேதி, விசிகவிலிருந்து நிரந்தரமாக விலகுவதாக அறிவித்தார். இதே தினத்தில், தமிழ்நாட்டில் புதிய தூணாக உருவெடுத்துவரும் தமிழக வெற்றிக் கழகம் (தவெக) கட்சியில் இணைந்து தனது புதிய அரசியல் பயணத்தைத் தொடங்கினார். இது அவரது அரசியல் வாழ்க்கையில் ஒரு முக்கிய திருப்பமாக பார்க்கப்படுகிறது. தவெக கட்சியின் தர்வாயில், தனது தேர்தல் வியூக அறிவையும், சமூகத்தில் பெற்றுள்ள ஆதரவும் இணைத்து, புதிய தலைமுறையை நோக்கி வழிகாட்டும் முயற்சியில் ஈடுபடுகிறார். திருவாரூரிலிருந்து மதுரை வரை, அவரது அரசியல் இயக்கம் தீவிரமாகும் நிலையில், அடுத்த சட்டமன்ற தேர்தலிலும் அவர் முக்கிய பங்காற்றவுள்ளார் என அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

தவெகவின் எதிர்காலத்தை மாற்றப்போகும் தூண் - ஆதவ் அர்ஜுனா!

தமிழக வெற்றிக் கழகம் (தவெக) என்ற புதிய கட்சியில் ஆதவ் அர்ஜுனாவின் இணைப்பு, அந்தக் கட்சிக்கே ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் திறனுடையது. நீண்ட காலமாக தேர்தல் வியூகங்களை வடிவமைத்து பல கட்சிகளுக்கே வெற்றி கொண்டு வந்தவர், இப்போது நேரடியாகவே ஒரு கட்சியில் சேர்ந்து அதற்கான வளர்ச்சிப் பாதையை அமைக்கத் துவங்கியிருக்கிறார். இது அவரது அரசியல் வாழ்க்கையில் மட்டுமல்லாமல், தவெகவின் வருங்காலக் கட்டமைப்பிலும் தீவிர தாக்கத்தை ஏற்படுத்தும். தவெகவின் அடித்தளத்தை மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கான திட்டங்கள், வாக்காளர் பகுப்பாய்வுகள், பிரசார உத்திகள் ஆகியவை-all in one-ஆதவ் அர்ஜுனாவின் கைப்பாடுகளில் இருக்கின்றன. இவை கடந்த காலங்களில் அவர் பங்கெடுத்த அரசியல் வெற்றிகளை நினைவுபடுத்துகிறது. ஆனால் இப்போது, அவர் எந்த ஓரமாக வேண்டுமானாலும் பார்த்துவிட்டு விலகும் ஆலோசகராக இல்லை; மாற்றாக, கட்சியின் ஒரு முழுமையான பங்காளியாக, ஒவ்வொரு நடவடிக்கையிலும் தீவிரமாக இறங்கியிருக்கிறார். இணைந்த சில நாட்களிலேயே தவெக தலைமைத்துவம், அவரது வருகையை ஒரு நம்பிக்கையின் அடையாளமாகவே ஏற்றுக்கொண்டிருக்கிறது. அத்துடன், இளைஞர்களிடையே அவருடைய முன்னோக்கி சிந்தனை மிகுந்த வரவேற்பைப் பெற்றிருக்கிறது. ஊரகமும் நகர்ப்புறமும் உள்ள மக்களிடம் கட்சி பரப்புரையை கொண்டு செல்லும் வகையில், சமூக ஊடக வியூகங்களை விரிவாக பயன் படுத்தவுள்ளதா என்பது எதிர்பார்க்கப்படுகிறது. தவெக ஒரு புதிய கட்சி என்றாலும், அதற்குள் ஒரு துரித வளர்ச்சிப் பாதையை உருவாக்கும் சாத்தியமுள்ள தலைவராகவே ஆதவ் அர்ஜுனா இன்று பார்க்கப்படுகிறார். கட்சியின் கொள்கைகள் மற்றும் மக்கள் சேவையை முன்னிறுத்தும் நிகழ்ச்சிகள், அவரது வழிகாட்டலின் கீழ் திட்டமிடப்படும். இந்த அடிப்படையில், எதிர்காலத்தில் தமிழக அரசியலில் தவெக ஒரு முக்கிய அங்கமாக மாறுவதற்கான வாய்ப்பு பெரிதாகவே இருக்கிறது. அதற்கான அடித்தளங்களை இப்போது அமைக்கிற ஒரே தலைமைத்துவ உருவம் ஆதவ் அர்ஜுனா என்பதிலும் சந்தேகம் இல்லை. அவர் கட்சிக்குள் புதிய ஜனநாயக கலாச்சாரத்தையும், திட்டமிட்ட வளர்ச்சி நோக்கையும் கொண்டு வரக்கூடிய தலைவராக வரலாற்றில் பதிவாக வாய்ப்பு உள்ளது.

## ஆதவ் அர்ஜுனாவின் பயணத்தில் புதிய பரிணாமம்!

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள இளம் அரசியல் ஆர்வலனாக துவங்கிய ஆதவ் அர்ஜுனா, இப்போது தேசிய அளவிலான தேர்தல் வியூக அமைப்பாளராக திகழ்கிறார். ஆரம்பத்தில் மாவட்ட நிலை அரசியல் செயல்பாடுகளில்தான் ஈடுபட்டிருந்த அவர், தனது கள அனுபவத்தையும் நவீன தொழில்நுட்பங்களின் பயனையும் இணைத்துக்கொண்டு, மாநிலத்திலேயே değil, நாடு முழுவதும் அரசியல் வட்டாரங்களில் கவனிக்கப்படும் நபராக மாறியுள்ளார். அரசியல் வியூகங்களை வகுப்பதில் மட்டும் அல்லாமல், சமூக ஊடகங்களில் ஈடுபாடு, விளையாட்டு நிர்வாகத்தில் முக்கிய பொறுப்புகள், தொண்டு முயற்சிகள் என பல துறைகளிலும் தன் கால் பதித்துள்ளார். அரசியலில் வெறும் பதவிக்காக அல்லாமல், திட்டமிட்டு வளர்ந்து வருபவராக அவர் உருவெடுத்திருக்கிறார். இளம் தலைமுறைக்கு அவர் ஒரு உருவகமாகவும் பார்க்கப்படுகிறார். இலக்கு மற்றும் திட்டமிடலின் அடிப்படையில் முன்னேறும் அவரது அணுகுமுறை, எதிர்கால அரசியல் மாற்றங்களுக்கு வழிகாட்டக்கூடியதாக இருப்பதற்கான சாத்தியங்களும் பலமாகவே உள்ளன.

புதிய தேடலுக்கான புதிய திசை !

ஆதவ் அர்ஜுனாவின் அரசியல் பயணம் பரிணாமமான கட்டங்களை கடந்து இன்று புதிய ஒரு திசையை நோக்கி பயணிக்கிறது. ஆரம்பத்தில் ஒரு செயல் நிபுணராக, பின்னர் தேர்தல் வியூக கலைஞராக, தற்போது தனிச்சிறப்பான அரசியல் முகமாக மாறியுள்ளார். விசிகவிலிருந்து விலகி, தவெகவில் இணைந்தது, அவருடைய அரசியல் எண்ணங்களுக்கும் செயல்பாடுகளுக்கும் ஏற்ப ஒரு இயற்கையான மாற்றமாக பார்க்கப்படுகிறது. தீவிர சிந்தனையோடும் நவீன அணுகுமுறையோடும் அரசியலை நோக்கும் ஆதவ் அர்ஜுனா, இனி தனக்கென ஒரு தனிச்சிறப்பு மிக்க இடத்தை அரசியல் வரலாற்றில் நிரூபிக்க முடியும் என பலர் நம்புகின்றனர். தேர்தல் வியூகக் களத்திலோ, கட்சி கட்டமைப்பிலோ, அல்லது சமூகப் பரிவர்த்தனைகளிலோ-எந்த துறையிலாயினும்-அவர் எடுத்துக்கும் ஒவ்வொரு நடவடிக்கையும், எதிர்கால தமிழக அரசியலின் ஓர் புதிய ரூபத்தை நிர்ணயிக்கக்கூடிய தாக்கத்துடன் இருப்பது உறுதியாக தெரிகின்றது. அவருடைய அரசியல் பயணத்தின் அடுத்த அத்தியாயம் எப்படியிருக்கும் என்பதை காலமே தீர்மானிக்கட்டும்!






EPIC TOYOTA
MOUNT ROAD,CHENNAI | VYASARPADI, CHENNAI
9500007575 | 9500007979




TIMES OF REPUBLIC TAMIL MONTHLY RNI. NO: TNTAM/2022/82294
Owned Published and printed by C.NAVIN PRAKASH, Published from NO,33 PRINCE VILLAGE APTMS, PHASE 2 BLOCK NO C15, DOOR NO.303 ILAIYA MUDALI STREET TONDIARPET, CHENNAI-.600081. & printed at SEKAR OFFSET PRINTERS, No.168/50, BIG STREET, CHEPAUK, Chennai - 600 005. Editor C.NAVIN PRAKASH